AL/2017/25-C/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

**25-C T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989 வரை

சுட்டெண்: ..................................

**அறிவுறுத்தல்கள்:**

- இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
- ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின், அதனை இப்பத்திரத்திலே **அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
- இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

- **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐவைந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) ஹிஸ்பனியோலா (2) கியூபா (3) பஹாமாஸ்
(4) ஜமெய்க்கா (5) அலெஸ்கா (.........)

**2.** (1) சுபீரியர் ஏரி (2) வயிகல் ஏரி (3) மிக்சிகன் ஏரி
(4) ஈரி ஏரி (5) ஒன்றாரியோ ஏரி (.........)

**3.** (1) உரிமை மசோதா
(2) அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்
(3) மனித உரிமைகள் பிரகடனம்
(4) ஆஸ்திரேலியா வெள்ளையருக்கு மட்டும் என்னும் கொள்கை
(5) மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனம் (.........)

**4.** (1) நிக்கொலஸ் கொர்ப்பணிக்கஸ் (2) உல்ரிச் ஸ்விங்க்ளி (3) ஜொஹானஸ் கெப்லர்
(4) பரசெல்சஸ் (5) வில்லியம் ஹார்வி (.........)

**5.** (1) காற்றியக்கும் இயந்திர ஆலை
(2) பறக்கும் விண்கலம்
(3) இழைக்கும் கருவி (Jenny)
(4) நீர்ச்சட்டகம்
(5) நீராவி இயந்திரம் (.........)

**6.** (1) லா∴பயெற் (2) மிராபோ (3) சார்ள்ஸ் கலோன்
(4) அபேசயீஸ் (5) ரொபெஸ்பியர் (.........)

**7.** (1) ஆர்ஜென்டீனா (2) ஜோர்டான் (3) சீரியா
(4) ஈராக் (5) ஈரான் (.........)

**8.** (1) சேர்பியா (2) குரோசியா (3) மொன்ரினீகுரோ
(4) பெல்கிரேட் (5) பொஸ்னியா - ஹேர்சிகோவினா (.........)

**9.** (1) ராஜேந்திர பிரசாத் (2) சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (3) லால் பகதூர் சாஸ்திரி
(4) நீலம் சஞ்சீவரெட்டி (5) ராமஸ்சுவாமி வெங்கடராமன் (.........)

**10.** (1) அலெக்ஸி கொசிகின் (2) லியோனிட் வ்றெஷ்நேவ் (3) அந்திரபோவ்
(4) சேர்ணென்கோ (5) லெச் வலேசா (.........)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) புதிய உலகம் - அமெரிக்காக் கண்டம்
(2) கடைக்காரர்களின் தேசம் - இங்கிலாந்து
(3) துயில் கொள்ளும் ராட்சதன் - சீனா
(4) ஒரு புவியியல் வரையறை மட்டுமே - ஜேர்மனி
(5) முடியிலுள்ள மணி - இந்தியா (.........)

**12.** (1) சூரிய மையக்கோட்பாடு - தொலமி
(2) ஈர்ப்பு அளவுக் கோட்பாடு - ஐசக் நியூட்டன்
(3) பரிணாம வளர்ச்சி - சார்ள்ஸ் டார்வின்
(4) ரேடியம் கண்டுபிடிப்பு - மேரி கியூரி
(5) பரஸ்பர இயைபுக் கோட்பாடு - அல்பேர்ட் ஐன்ஸ்டீன் (.........)

**13.** (1) சிவப்புச் சட்டையினர் - கரிபோல்டி
(2) வெண்ணிறப்படை - ஸ்டாலின்
(3) கறுப்புச் சட்டையினர் - முசோலினி
(4) பழுப்புநிறச் சட்டையினர் - ஹிட்லர்
(5) செம்படை - மா ஓ சேதுங் (.........)

**14.** (1) பாகிஸ்தான் - முகம்மது அலி ஜின்னா
(2) பர்மா - ஊ னு
(3) மலேசியா - துங்கு அப்துல் ரஹ்மான்
(4) இந்தோனேசியா - ஹோ சீ மின்
(5) பங்களாதேஷ் - ஷேக் முஜிபர் ரஹ்மான் (.........)

**15.** (1) சைப்பிரஸ் - மக்காரியோஸ்
(2) கொங்கோ - பற்றிக் லுமும்பா
(3) நைஜீரியா - குவாமே நிக்குறுமா
(4) உகண்டா - மில்ற்றன் ஓபோட்டே
(5) சிம்பாபே - ரொபர்ட் முகாபே (.........)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மறுமலர்ச்சி | A | ஸ்பானியா |
| (ii) | சமயச் சீர்திருத்தம் | B | ரஷ்யா |
| (iii) | நாடுகாண் பயணங்கள் | C | இங்கிலாந்து |
| (iv) | கைத்தொழில் புரட்சி | D | ஜேர்மனி |
| (v) | சோசலிசப் புரட்சி | E | இத்தாலி |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | நிக்கோலோ மக்கியாவலி | A | 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சமான கட்டமாகும்.' |
| (ii) | ஜேன் ஜேக்ஸ் றூசோ | B | 'நூறு மலர்கள் மலரட்டும்; நூறு சிந்தனைக் கூடங்கள் போட்டியாக நிலைக்கட்டும்!' |
| (iii) | கார்ல் மார்க்ஸ் | C | 'எல்லா நாடுகளிலும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றாக அணிதிரள்க!' |
| (iv) | விளடிமீர் லெனின் | D | 'அரசன் சிங்கத்தையும் நரியையும் பின்பற்ற வேண்டும்.' |
| (v) | மா ஓ சேதுங் | E | 'மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான், ஆனால் எங்கும் அவன் விலங்கிடப்பட்டுள்ளான்.' |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**18.**

| X | Y |
|---|---|
| (i) லூதர் | A கனிங் |
| (ii) ரிச்செல்யூ | B சேகுவேரா |
| (iii) காசல்றீ | C சூலாலொங்கோர்ன் |
| (iv) மொங்குத் | D கல்வின் |
| (v) கஸ்ற்றோ | E மசாரின் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**19.**

| X | Y |
|---|---|
| (i) 'நானே அரசு' | A புளோரன்ஸ் நைட்டிங்கேல் |
| (ii) புரட்சியின் குழந்தை | B மாக்கிரட் தச்சர் |
| (iii) விளக்கையேந்திய பெண் | C விக்ரோறியா மகாராணி |
| (iv) இந்தியாவின் சக்கரவர்த்தினி | D நெப்போலியன் போனபாட் |
| (v) வைராக்கியமான பெண்மணி | E 14 ஆம் லூயி |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**20.**

| X | Y |
|---|---|
| (i) தோமஸ் ஹொப்ஸ் | A கீதாஞ்சலி |
| (ii) மொன்டெஸ்கியூ | B இந்தியாவை அறிந்து கொண்டமை (Discovery of India) |
| (iii) ரவீந்திரநாத் தாகூர் | C லெவியதான் |
| (iv) ஜவஹர்லால் நேரு | D வரலாறென்பது யாது? |
| (v) E. H. கார் | E சட்டங்களின் இயல்பு |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**21.**

| X | Y |
|---|---|
| (i) ஆபிரகாம் லிங்கன் | A ஐந்தாண்டுத் திட்டங்கள் |
| (ii) மகாத்மா காந்தி | B முன்னோக்கிய பெரும்பாய்ச்சல் |
| (iii) ஜோசப் ஸ்டாலின் | C பஞ்சசீலம் அல்லது ஐந்து கொள்கைகள் |
| (iv) அச்மத் சுகர்ணோ | D அகிம்சை |
| (v) மா ஓ சேதுங் | E அடிமை முறை ஒழிப்பு |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**22.**

| X | Y |
|---|---|
| (i) தாய்லாந்து | A பாக்தாத் |
| (ii) ஈரான் | B ஜகார்த்தா |
| (iii) ஈராக் | C கராச்சி |
| (iv) பாகிஸ்தான் | D பாங்கொக் |
| (v) இந்தோனேசியா | E ரெஹறான் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**23.**

| X | Y |
|---|---|
| (i) தேசிய சங்கம் | A பாரிஸ் |
| (ii) சர்வதேச நிறுவனம் | B உரோமாபுரி |
| (iii) சர்வதேச நிதி நிறுவனம் (ICJ) | C ஹேக் |
| (iv) சர்வதேச கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம் (UNESCO) | D ஜெனீவா |
| (v) உலக உணவுத்திட்டம் (WFP) | E நியூயோர்க் |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

**24.**

| X | Y |
|---|---|
| (i) ஸ்ரேலிங் பவுண் | A ஜப்பான் |
| (ii) ரூபிள் | B ஐக்கிய இராச்சியம் |
| (iii) யென் | C சீனா |
| (iv) யுவான் | D இந்தியா |
| (v) ரூபாய் | E ரஷ்யா |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (………)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**25.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கோல்ட் கோஸ்ட் | A | தன்சானியா |
| (ii) | பெல்ஜியன் கொங்கோ | B | பங்களாதேஷ் |
| (iii) | தங்கநயிகா | C | கானா |
| (iv) | கிழக்குப் பாகிஸ்தான் | D | சிம்பாபே |
| (v) | றோடீசியா | E | சயறே |

(1) DECAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

● **26 - 30** வரையுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**26.** **'வீனஸின் பிறப்பு' என்பதை வரைந்த பிரபலமான புளோரன்ஸ் நாட்டு ஓவியர் யார்?**
(1) மசாசியோ (2) பொற்றிசெலி
(3) லியனார்டோ டா வின்ஸி (4) ரஃபேல்
(5) மைக்கல் அஞ்சலோ (.........)

**27.** **1649 ஆம் ஆண்டு லண்டனில் பகிரங்கமாக கழுவேற்றப்பட்ட இங்கிலாந்து மன்னர் யார்?**
(1) முதலாம் ஜேம்ஸ் (2) முதலாம் சார்ள்ஸ்
(3) இரண்டாம் சார்ள்ஸ் (4) மூன்றாம் சார்ள்ஸ்
(5) ஐந்தாம் சார்ள்ஸ் (.........)

**28.** **சர்வதேச சங்கத்தை அமைப்பதற்கான யோசனையை முன்வைத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி யார்?**
(1) வூட்றோ வில்சன் (2) வொரன் ஹாடிங்
(3) கல்வின் கூலிச் (4) ஹேர்பட் ஹூவர்
(5) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (.........)

**29.** **இரண்டாம் உலகப் போரின் காலத்தில் பிரித்தானியாவிலே பிரதமராக இருந்தவர் யார்?**
(1) லோயிட் ஜோர்ஜ் (2) ரம்சே மக்டொனால்ட்
(3) ஸ்டான்லி போல்ட்வின் (4) நெவில் சேம்பர்லின்
(5) வின்ஸ்டன் சேர்ச்சில் (.........)

**30.** **சீனமக்கள் குடியரசின் முதலாவது பிரதம மந்திரி யார்?**
(1) சுன் யெத் சன் (2) சியங் காயிஷேக்
(3) மா ஓ சேதுங் (4) சூ என் லாய்
(5) டெங் சியாவோ பிங் (.........)

● **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல சரியான** விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,
**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31.** **மேல்வருவனவற்றுள் பிரெஞ்சுப் புரட்சியின் பிரதானமான கட்டங்கள் எவை?**
(A) தேசிய சபை உருவானமை
(B) பஸ்ரீல் கோட்டையினைத் தகர்த்தமை
(C) பயங்கர ஆட்சி
(D) டிரக்டரியின் ஆட்சி (.........)

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

[பக். 5 ஐப் பார்க்க

**32.** **மேல்வருவோருள் பிரித்தானிய இந்தியாவில் தேசாதிபதிகளாக இருந்தவர்கள் யாவர்?**
(A) ஆதர் வெலெஸ்லி
(B) தோமஸ் மக்கோலே
(C) வில்லியம் பென்ரிங்
(D) மவுன்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் (.........)

**33.** **மேல்வருவோரில் இந்திய காங்கிரசின் அங்கத்தவர்கள் யார்?**
(A) தாதாபாய் நவரோஜி
(B) சுரேந்திரநாத் பனர்ஜி
(C) ஜயப்பிரகாஷ் நாராயணன்
(D) சுபாஸ் சந்திரபோஸ் (.........)

**34.** **மேல்வருவனவற்றுள் முதலாம் உலகப் போருக்கு ஏதுவாக இருந்த பிரதான காரணிகள் யாவை?**
(A) ஒஸ்திரியாவுக்கும் துருக்கிக்கும் இடையிலான தகராறு
(B) ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான காலனித்துவப் போட்டி
(C) ஐரோப்பா இரண்டு வல்லரசு அணிகளாக இணைந்து கொண்டமை
(D) பாசிசம், நாட்சிசம் ஆகியவற்றின் எழுச்சி (.........)

**35.** **மேல்வருவோரில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் செயலாளர் நாயகமாக இருந்தவர் யார்?**
(A) ற்றிக்வே லீ
(B) கொன்ராட் அடினோர்
(C) டாக் ஹமர்ஸ்ஜோல்ட்
(D) அலெக்ஸாந்தர் டுப்செக் (.........)

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பன மாண்புமிகு புரட்சியின் பிரதான சுலோகமாகும். | மாண்புமிகு புரட்சியின் பின்னர் உடனடியாக ஒலிவர் குரோம்வெல் ஒரு குடியரசினை அமைத்தார். | (.........) |
| **37.** | ரொபேர்ட் வால்போல் என்பவரை இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரியாகக் கொள்வர். | 1945 இலே கிளெமென்ட் அட்லி பிரித்தானியாவின் முதலாவது தொழிற்கட்சிப் பிரதமரானார். | (.........) |
| **38.** | மைஜீ வம்சம் மீண்டும் பதவி பெற்றிருந்த காலத்தில் டொகுகாவா ஷோகன் ஆட்சியமைப்பு மேலும் பலம் பெற்றது. | இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஜப்பான் சரணடைந்த பின்பு அமெரிக்காவின் ஆட்சியின் கீழ் ஒரு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. | (.........) |
| **39.** | ஹிரோஷிமா, நாகசாகி என்பவற்றில் அணுகுண்டுகளை வீசியதன் விளைவாக முடிவடைந்த இரண்டாம் உலகப் போரே மனித வரலாற்றிலே மிகக் கூடுதலான அழிவுகள் ஏற்பட்ட போராகும். | இரண்டாம் உலகப் போரிலே ஐந்து கோடி மக்கள் இறந்தனர் என்று கணிக்கப்பட்டதுடன் சொத்துடைமைகளுக்கு ஏற்பட்ட அழிவு கணிப்பீடு செய்ய முடியாத ஒன்றாகும். | (.........) |
| **40.** | அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்பு 1976 இல் ஒன்றிணைக்கப்பட்ட வியற்நாமில் சோசலிசக் குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது. | பிரெஷ்னேவுடைய கொள்கைகள் பனிப்போரின் முடிவுக்கு வழிவகுத்தன என்பதில் எதுவித ஐயமும் இல்லை. | (.........) |

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

**25-C T II**

## நவீன உலக வரலாறு - கி.பி. 1500 - 1989 வரை

**அறிவுறுத்தல்கள்:**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்குத் தரப்பட்ட வரைபடத்தில் மேலே குறிப்பிட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் **எவையேனும் இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) இமய மலை (ii) ஜாவா (iii) பீஜிங் (iv) கருங்கடல்
(v) போர்த்துக்கல் (vi) மிசிசிப்பி (vii) பனாமா கால்வாய் (viii) கானா

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** "ஐரோப்பாவின் படர்ச்சி உலகின் பல பாகங்களிற் பெருமாற்றங்களை ஏற்படுத்தியது."

(i) ஆதிகால நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய போர்த்துக்கேய மன்னர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) ஆதிகால நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய ஒரு ஸ்பானிய மன்னரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(iii) நாடுகாண் பயணங்களின் பிரதானமான நோக்கங்கள் பற்றி ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக. *(03 புள்ளிகள்)*

(iv) போர்த்துக்கலினது அல்லது ஸ்பானியாவினது குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஐரோப்பிய ஆதிக்கப் படர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(09 புள்ளிகள்)*

**3.** "நவீன உலக வரலாற்றில் அமெரிக்க சுதந்திரப்போர் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைகின்றது."

(i) அமெரிக்க சுதந்திரப் போருக்குத் தலைமை தாங்கியவரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) வட அமெரிக்காவிலுள்ள இங்கிலாந்தின் காலனித்துவ பிரதேசங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) அமெரிக்க சுதந்திரப்போருக்கு ஏதுவான பொருளாதாரக் காரணங்கள் பற்றி ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக. *(03 புள்ளிகள்)*

(iv) அமெரிக்க சுதந்திரப் போரின் முக்கியத்துவத்தை அதன் விளைவுகள், தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் ஆராய்க. *(08 புள்ளிகள்)*

**4.** 1919 - 1947 ஆகிய காலப்பகுதியில் ஏற்பட்ட இந்திய தேசிய இயக்கத்தின் பிரதான கட்டங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**5.** (i) ரஷ்யாவில் பொல்ஷெவிக் புரட்சி ஏற்பட்டமைக்கான பிரதான காரணங்களை ஆராய்க. *(08 புள்ளிகள்)*

(ii) உலக வரலாற்றில் பொல்ஷெவிக் புரட்சியின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க. *(06 புள்ளிகள்)*

**6.** "வேர்சை உடன்படிக்கையே இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கு பொறுப்புடையது."

(i) கூட்டு வல்லரசுகள் எந்த நாட்டுடன் வேர்சை உடன்படிக்கையை எழுதிக் கொண்டன? *(01 புள்ளி)*

(ii) முதலாம் உலகப் போரில் இணைந்த வல்லரசுகளில் **இரண்டின்** பெயர்களையும் மத்திய வல்லரசுகள் **இரண்டின்** பெயர்களையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) வேர்சை உடன்படிக்கையின் பிரதானமான நிபந்தனைகளைப் பற்றி ஒரு சுருக்கமான கட்டுரை எழுதுக. *(03 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு வேர்சை உடன்படிக்கை எந்தளவிற்குப் பொறுப்பானது என்பதைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**7.** 1949 வரையான இந்தோனேசிய தேசிய இயக்கத்தின் பிரதான கட்டங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**8.** (i) இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் அச்சு நாடுகளோடு இணைந்து கொள்வதற்கு ஏதுவாக இருந்த உள்நாட்டு, அயல்நாட்டு விவகாரங்கள் தொடர்பான காரணங்களை ஆராய்க. *(07 புள்ளிகள்)*

(ii) இரண்டாம் உலகப்போரிலே தென்கிழக்காசியா மீது ஜப்பான் நடத்திய படையெடுப்பினைச் சுருக்கமாக விமர்சிக்குக. *(07 புள்ளிகள்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(i) ஒல்லாந்தரின் கீழைத்தேய குடியேற்ற நாடுகள் சாம்ராச்சியம்

(ii) எதிர்சமயப் புரட்சி (Counter Reformation)

(iii) 1688 ஆம் ஆண்டு ஒளிமிகு புரட்சி

(iv) ஹோ சி மின்

(v) இஸ்ரேலின் உருவாக்கம்

(vi) சீனாவின் பண்பாட்டுப் புரட்சி *(ஒவ்வொரு சிறுகுறிப்புக்கும் **07** புள்ளிகள் வீதம்)*

**(B)** கொரியப் போரிலும் கொங்கோ நெருக்கடியிலும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் கொண்டிருந்த பங்கினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ඉතිහාසය II
வரலாறு II
History II

25-C T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....................




Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka